**செய்தி வெளியீடு எண் : 1393** **நாள் : 09.09.2024**

## <u>செய்தி வெளியீடு</u>

## <u>இலங்கை வசமுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திடவும், அவர்கள் மீது விதிக்கப்பட்ட அபராதத் தொகையினை தள்ளுபடி செய்யதிடவும், கூட்டுப்பணிக் குழுக் கூட்டத்தை நடத்திடத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வலியுறுத்தியும் மாண்புமிகு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம்</u>

மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 8–09–2024 அன்று ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில், இலங்கை அதிகாரிகளால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவதைக் குறிப்பிட்டு, கடந்த 7–09–2024 அன்று புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த 14 மீனவர்களும், IND–TN–08–MM–198, IND–TN–08–MM–28 மற்றும் IND–TN–08–MM–52 பதிவெண்கள் கொண்ட அவர்களது மூன்று மீன்பிடி விசைப்படகுகளும் இலங்கை கடற்படையினர் சிறைபிடித்துள்ளதைக் குறிப்பிட்டுள்ளார்.

2024ஆம் ஆண்டில் மட்டும் (7–09–2024 வரை) 350 மீனவர்கள் மற்றும் 49 மீன்பிடிப் படகுகள் இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளன என்றும், கடந்த ஆறு ஆண்டுகளில் இதுவே மிக அதிகமானதென்றும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். மேலும், இலங்கை நீதிமன்றங்கள் மீனவர்களின் சக்திக்கு மீறிய அபராதங்களை விதித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார். இலங்கை அதிகாரிகளின் இத்தகைய நடவடிக்கைகள், தமிழக மீனவர்கள் அங்கு சிறையில் இருக்கும் காலத்தை நீட்டிக்க வழி செய்வதோடு, ஏற்கனவே துயரத்தில் உள்ள மீனவக் குடும்பங்களை மிகுந்த வேதனைக்குள்ளாக்கி அவர்களுக்கு மிகப்பெரிய பொருளாதார இழப்பிற்கும் வழி வகுக்குமென்று தனது முந்தைய கடிதத்திலேயே சுட்டிக்காட்டியுள்ளதை நினைவுகூர்ந்துள்ளார்.

எனவே, இலங்கை சிறையில் உள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட உறுதியான தூதரக முயற்சிகளை மேற்கொள்ளுமாறும், மீனவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கடுமையான அபராதத் தொகையைத் தள்ளுபடி செய்திடவும், கூட்டுப்பணிக் குழுக் கூட்டத்தைக் விரைந்து நடத்திடவும் மாண்புமிகு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தலையிட்டு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

–––––

**Text of the D.O. Letter of Hon'ble Chief Minister of Tamil Nadu Thiru. M.K. Stalin addressed to the Hon'ble Union Minister of External Affairs Dr. S. Jaishankar requesting to ensure the release of all the fishermen and boats in Sri Lankan custody and to secure a waiver of the hefty penalty imposed on the fishermen and to initiate measures to revive the Joint Working Group**

I would like to draw your attention to the alarming rise in the incidents of apprehension of Indian fishermen by the Sri Lankan authorities. On 07.09.2024, 14 fishermen from Pudukkottai District along with their three mechanized fishing boats bearing Registration Nos. IND-TN-08-MM-198, IND-TN-08-MM-28 and IND-TN-08-MM-52 were taken into custody by the Sri Lankan Navy.

In the year 2024 alone (till 07.09.2024), 350 fishermen and 49 fishing boats have been apprehended by the Sri Lankan Navy, which is the highest in the last six years. The Sri Lankan courts are also imposing hefty fines on the fishermen which are way beyond their means. In my previous letter, I had already mentioned that this will inevitably lead to prolonged incarceration and resultant distress for their families.

I therefore urge you to take immediate and concrete diplomatic efforts to ensure the release of all the fishermen and boats in Sri Lankan custody. I also request your intervention to secure a waiver of the hefty penalty imposed on the fishermen and also to initiate measures to revive the Joint Working Group without any further delay.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu